DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 42/2025 |
| Prosecution: | அ.சா.4 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | சந்தியாவதி(காவல் உதவி ஆய்வாளர்) |
| **Husband' Name** | ~ | விஜயன் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day of **Dt. 05.02.2026.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது குரோம்பேட்டை காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகின்றேன். கடந்த 14.07.2024 ஆம்தேதி காலை 7 மணி அளவில் நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது புகார்தாரர் பாலசுப்பிரமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.176/2024 சட்டப்பிரிவுகள் 126(2), 296(b),308(4),BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.. **புகார் மனு அ.சா.ஆ 3 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. புகார்தாரரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வெங்கடேசன் மற்றும் ஜோசப் ஆகியோரிடத்தில் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராயப்பன் மற்றும் அஜித் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **பார்வை மகசர் அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. கடந்த 14.07.2024 அன்று காலை 11 மணிக்கு சானடோரியம் பச்சைமலை ஏறும் வழியில் இவ்வழக்கின் எதிரிகள் ரமேஷ், பாலாஜி என்கிற கிஷோர் ஆகிய இருவரையும் கைதுக்கான காரணம் கூறி கைது செய்து எனது விசாரணையின் போது 1வது எதிரி ரமேஷ் தாமாக முன்வந்து தன்னிச்சையாக அளித்த ஒப்புதல் வாக்குமுலத்தினை சாட்சிகள் ,சுரேஷ் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து அதனடிப்படையில் அதே சாட்சிகள் முன்னிலையில் 1 அடி நீளமுள்ள மரக்கைபப்பிடியுடன் கூடிய இரும்பு கத்தி ஒன்றினை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அதே தேதியில் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

4. எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான கத்தியை பச்சைமைலை புதரில் இருந்து எடுத்து ஆஜர்படுத்தினேன். **–அது அ.சா.ஆ.7 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மேற்படி **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகளிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 95 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கத்தி அ.சா.பொ. 1 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. பின்னர் என்னுடைய புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 126(2), 296(b),308(4),BNS கீழ் 10.08.2024 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் புகார் மனுவில் புகார்தாரர் தேதி குறிப்பிடாமல் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல தேதி குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கில் அ.சா. 1 எனது விசாரணையில் ஆட்டோ ஓட்டி வந்ததாக சொல்லியுள்ளார். ஆனால் நீதிமன்ற சாட்சியத்தில் மெக்கானிக்காக வேலை பார்த்து வருவதாக சொல்லியுள்ளார். அ.சா.1 என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் நான் விசாரணை செய்தபோது ஆட்டோ ஓட்டி வந்ததாக சொன்னார். நான் பார்வை மகஜர் சாட்சிகளிடம் எவ்வித சங்கதியும் தெரிவிக்காமல் கையொப்பம் மட்டும் பெற்றேன் என்றால் சரியல்ல. இவ்வதுழக்கை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**

District Munsif-cum Judicial Magistrate,

Pallavaram